கனம் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்.

முன்னிலை : திரு. E.மணிகண்டன், B.A., B.L.,

முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி,(FAC)

திருமங்கலம்.

2025ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 01ம் தேதி வெள்ளிக்கிழமை

இடைநிலை மனு எண்.32/2025

மற்றும்

இடைநிலை மனு எண்.33/2025

இன்

அசல் வழக்கு எண்.245/2014

-----

1) இராதாகிருஷ்ணன்
2) சுப்பா ரெட்டி
3) சுப்புராஜ்
4) பாலசுப்ரமணியன்
5) சுந்தர்ராஜன்
6) சின்னக்கம்மாள் என்ற பாப்பம்மாள்
7) கலாவதி
8) சுப்புலெட்சுமி ... மனுதாரர்கள்/வாதிகள்

/ எதிர்/

1) ராமநாதன்
2) நடராஜன்
3) ராம்குமார்
4) ஜெயலெட்சுமி
5) மலர் பாப்பா
6) சசிக்குமார்
7) கார்த்திக்
8) வளர்மதி

9) லலிதா
10) தனலெட்சுமி

... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

மேற்படி இரண்டு மனுக்களிலும் 1, 2, 4 மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.சரவணன் அவர்கள் ஆஜராகியும், 3 மற்றும் 5 முதல் 8மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.தனபாண்டியன் அவர்கள் ஆஜராகியும், 1, 2, 5 முதல் 8 மற்றும் 10ம் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.V.குருசாமி அவர்கள் ஆஜராகியும், 3, 4, 9 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் ஒருதலைப்பட்சமாக்கப்பட்டும் இருந்த வழக்கில், இருதரப்பு வாதுரைக்கு போதிய வாய்ப்பளித்தும், மனு, எதிருரை மற்றும் சாட்சிய சான்றாவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் முன் பரிசீலனையின் கீழ் இருந்து வந்த மனுக்களில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## பொதுவான உத்தரவு

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் பிராதை திருத்துவதற்காக அசல் வழக்கை reopen செய்ய உத்தரவிட வேண்டுமாய் உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 151ன் கீழும் மற்றும் அசல் வழக்கின் பிராதை திருத்தம் செய்ய வேண்டி கட்டளை 6 விதி 17 மற்றும் பிரிவு 151–ன் கீழும் இந்த இரண்டு மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1. தீர்மானிக்க வேண்டிய விசயம்</u>** :-

இந்த மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனுக்கள் அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

அசல் மனுக்களானது பிராதை திருத்துவதற்காக அசல் வழக்கை reopen செய்ய உத்தரவிட வேண்டி IA No.32/2025 மனுவும், அசல் வழக்கின் பிராதை திருத்தம் செய்ய வேண்டி IA No.33/2025 மனுவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் எதிருரையில், மனுதாரர்கள்/வாதிகளின் மனுக்களானது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், தாவா வழக்கை இழுத்தடிக்கும் நோக்கத்துடன், எதிர்மனுதாரர்களை வீண் அலைக்கலைவு செய்ய வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் தாவா மனு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே மனுதாரர்கள்/வாதிகளின் மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

**3<u>) தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில் இம்மனுக்கள் அனுமதிக்கத்தக்கதா? இல்லையா என்பதேயாகும்.</u>**

இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

3.1) மனுதாரர்கள்/வாதியானவர்கள் தங்களது மனுவில், அசல் வழக்கானது தாக்கல் செய்யப்பட்டபோது, தாவா வழக்கில் உள்ள சொத்து விபரத்தில் " கள்ளிக்குடி சார்பதிவாளர்" என்ற விவரம் விடுபட்டுள்ளது என்றும், எனவே மேற்படி விவரத்தினை சேர்த்து பிராதினை திருத்தம் செய்ய வேண்டும் என்றும், மேலும், அசல் வழக்கில் மேற்படி சீர்திருத்தங்களை மேற்கொள்வது அவசியமானது என்றும், அதன் அடிப்படையில் தாவா வழக்கை Re-open செய்ய வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

3.2) வழக்குச்சொத்து குறித்த முழுமையான விவரம் சொத்து விபரத்தில் குறிப்பிடவில்லை என்றும், அதனை சரிசெய்யும்விதமாக மேற்படி சீர்திருத்தங்கள் உள்ளது என்று மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கூறும் வாதத்தை ஏற்றும், மேற்படி வழக்குத்தரப்பினர்களுக்கு இடையே உள்ள பிரச்சனையை முழுமையாக தீர்வு காண்பதற்கு மேற்படி சீர்திருத்தங்கள் அவசியமானதாக உள்ளது என்பதை கருத்தில்கொண்டும், இம்மனுவினை அனுமதிப்பதால் தரப்பினர்களுக்கு இடையே மீண்டும் ஒரு வழக்கு தாக்கல் செய்வதை தவிர்க்கும்விதமாகவும் இருப்பதால். மேற்படி சீர்திருத்தங்களை மேற்கொள்ளவேண்டியது அவசியமானது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

**முடிவாக,** மனுதாரர்கள்/வாதிகளின் இம்மனுக்களானது அனுமதித்து இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, பின்னர் இன்று 01.08.2025ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.08.01 18:11:44 +0530

முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.

**இணைப்பு**:-

1. **மனுதாரர் தரப்பு சாட்சி** : இல்லை
2. **மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்** : இல்லை
3. **எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி** : இல்லை
4. **எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்** : இல்லை

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.08.01 18:11:52 +0530

முதன்மை மாவட்ட உரிமையில் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.

இடைநிலை மனு எண்.32/2025
மற்றும்
இடைநிலை மனு எண்.33/2025
அசல் வழக்கு எண்.245/2014
பொது வரைவு/செவ்வை உத்தரவு
நாள் : 01.08.2025